**O.S.No.14/2020**

வா.சா.1, திருமதி. சபினா பேகம்
நாள் :11.02.2026 நேரம் : 11.19AM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. தாவா சொத்தின் சர்வே எண் 383/3 என்றால் சரிதான். தாவா சொத்தின் வடக்கே ரோடு உள்ளது என்றால் சரிதான். தெற்கே சந்து சர்ஸ்வதி அம்மாள் வீடு என்றால் சரிதான். கிழக்கே கோவிந்தன்பிள்ளை காலிமனை வீடு என்றால் சரியல்ல. செல்லையா தேவர் வீடு. செல்லையா தேவர் என்பது 1ம் பிரதிவாதியின் தகப்பனார் என்றால் சரிதான். மேற்கே சுப்பிரமணியன்பிள்ளை வீடு மற்றும் காலியிடம் என்றால் சரிதான். தாவா சொத்தின் நான்குமால்கள் தவறாக உள்ளது என்று பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டும் அதை திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நான்குமால் சரியாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கு மோசடியான பத்திரத்தின் அடிப்படையில் மோசடியாக ஏற்பட்ட பட்டாவான வா.சா.ஆ 2 ஐ ரத்து செய்ய கோரி பரமக்கடி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பிரதிவாதி மனு செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வருவாய்கோட்டாட்சியரின் உத்தரவு எண். (அ)3/11207/2018 ல் எனது மீது 1ம் பிரதிவாதி கொடுத்த மனுவின் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்றால்அது பற்றி எனக்கு தெரியாது.மேற்படி மனு விசாரணையில் எனது தரப்பில் ஆஜராகி உள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி விட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவில் 1ம் பிரதிவாதி தாவா சொத்தை தனது டிராக்டர் நிறுத்தும்இடமாக பயன்படுத்தி வருவதாக வட்டாட்சியர் அறிக்கை சமர்பித்துள்ளதாக குறிப்பிடப்படடுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. மேற்படி வருவாய் கோட்டாட்சியரின் வழக்கு நிலுவையில் இருக்கும்போது 09.04.2020 ல் நான் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வருவாய் கோட்டாட்சியரிடம் 1ம் பிரதிவாதி எடுத்த நடவடிக்கை சம்மந்தமாக எனது பிராதில் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரத்தை நான் மறைத்து நான் வேண்டுமென்றே வழக்கு தாக்கல் செய்திருப்பது Fraud of Plea மற்றும் supression of material fact என்றால் சரியல்ல. நான் சுத்தமான கரங்களுடன் வழக்கு தாக்கல் செய்யாததால் சட்டப்படி தள்ளுபடி செய்யப்படி வேண்டியது என்றால் சரியல்ல.

3. நான் வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் எனது மோசடியான பத்திரங்கள் பற்றி பிரதிவாதிகளுக்கு நீதிமன்றத்தில் இருந்து அறிவிப்பு வந்த பின்னர் தான் தெரிய வந்தது என்றால் சரியல்ல. அதன் பிறகு தான் பிரதிவாதிகள் முதுகுளத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்கம் சான்றிதழ் பார்த்து 19.04.2023 ம் தேதி மேற்படி மோசடி பத்திரங்கள் ஏற்பட்டது பற்றி பிரதிவாதிகளுக்கு தெரிய வந்தது என்றாலும் அதன் அடிப்படையில் மேற்படி பத்திரங்களான வா.சா.ஆ 1, 2 பத்திரங்கள் செல்லதக்கதல்ல என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் சட்டகாலத்திற்குள் எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும் நான் சொல்வது போல் பிரதிவாதிகளின் எதிர்கோரிக்கை காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல.

4. நான் தாக்கல் செய்துள்ள வில்லங்க சான்றிதழ் பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும் ஆனால் எனக்கு படிக்க தெரியாது. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வில்லங்க சான்றிதழில் சர்வே எண் 383/3 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் உள்ளது. மேற்படி வில்லங்க சான்றிதழில் கருப்பையாபிள்ளை மகன் வாணிமுத்து செல்லையா தேவருக்கு எழுதிக் கொடுத்த கிரையம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரையம் பற்றி எனக்க நன்கு தெரிந்தும் தெரியாது என்று வழக்கிற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பெற்ற வில்லங்க சான்றிதழான வா.சா.ஆ 4 ஆவணத்தில் மேற்படி

விவரத்தைமறைத்து பெற்றுள்ளேன் என்றால் எனக்கு படிக்க தெரியாது. வா.சா.ஆ 4 ஆவணத்தை எனது கணவர் தான் பெற்றுள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எனது தாயாருக்கு கிரையம் கொடுத்தாக குறிப்பிடும் முருகவேலை நான் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். தாவா சொத்தை சட்டப்படியான ஆவணங்கள் மூலம் பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருவதால் பிரதிவாதிகளின் எதிர்கோரிக்கை அனுமதிக்கப்படவேண்டியது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் தாவா சொத்து உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது. தாவா சொத்து உண்மையான பாக்கியஸ்தர்களின் எதிராக எந்த பரிகாரம் சட்டப்படி எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து செல்லையா தேவர் வாரிசுகளுக்கும் 1ம் பிரதிவாதிக்கு கிடைக்கப்பட்டு அவரது அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் எதிர்கோரிக்கையில் RDO ன் நடவடிக்கைகள் பற்றி குறிப்பிட்டும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையில் அதை மறுத்து எந்த விளக்கமும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படி வேண்டியது என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 11.46AM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2026.02.11 17:25:08 +0530